# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கைப் பேரழிவுச் செயலாட்சிச் சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, மே மாதம் 13 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 21.25** **தபாற் செலவு : ரூபா 7.50**

## *2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கைப் பேரழிவுச் செயலாட்சிச் சட்டம்*

[*2005 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது*.]

*ச. வ. — ஓ 56/90*
*4341*

**தேசிய பேரழிவுச் செயலாட்சிப் பேரவையையும் பேரழிவுச் செயலாட்சி நிலையத்தையும் தாபிப்பதற்கும்; தொழினுட்ப மதியுரைக் குழுக்களை நியமிப்பதற்கும்; பேரழிவுச் செயலாட்சித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் ; பேரழிவு நிலைமையொன்றை வெளிப்படுத்துவதற்கும் ; நட்டஈடு அளிப்பதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கை ஆள்புலத்தினுள் இடம்பெறும் குறித்தசில பேரழிவு களின் காரணமாக மனித உயிரும், ஆதனமும் மற்றும் இலங்கையின் சூழலும் அச்சுறுத்தலுக்கும் ஆபத்திற்கும் உட்படுகின்றனவாதலாலும் :* *முன்னுரை.*

*அத்துடன், இந்தப் பேரழிவுகளின் விளைவுகளிலிருந்து மனித உயிரையும், மக்களின் ஆதனத்தையும் மற்றும் இலங்கையின் சூழலையும், தேசியக் கொள்கையொன்றையும் திட்டமொன்றையும் தயாரிப்பதன்மூலமும், அத்துடன் அத்தகைய கொள்கைக்கும் திட்டத்திற்கும் பயன்கொடுப்பதற்கென மையத்தில் ஒருங்கி ணைக்கப்பட்ட குழுக்களையும் நிறுவனங்களையும் நியமிப்ப தன்மூலமும் தேசியக் கண்ணோட்டமொன்றில் அவற்றைப் பயனுள்ளவகையில் கையாள்வதன்மூலம் பாதுகாப்பது அவசியமாகியுள்ளதாதலாலும் :*

*ஆகவே, இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படு வதாகுக :—*

***1.*** *இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கைப் பேரழிவுச் செயலாட்சிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச் சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.* *சுருக்கப் பெயர்.*

2 –PL. 000092– 1,250 (2005/02)

தேசிய பேரழிவுச் செயலாட்சிப் பேரவையைத் தாபித்தல்.

**2.** (1) தேசிய பேரழிவுச் செயலாட்சிப் பேரவை என அழைக்கப்படும் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் (இது இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) பேரவையானது, (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறாவழியுரிமையையும் பொது இலட்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும், அத்துடன் அது அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

பேரவையின் அமைப்பு.

**3.** (1) பேரவையானது, பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) சனாதிபதி, இவர் பேரவையின் தவிசாளராக இருத்தல் வேண்டும், (இவர் இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) ;

(ஆ) பிரதம அமைச்சர், இவர் பேரவையின் துணைத் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(இ) எதிர்க்கட்சித் தலைவர் ;

(ஈ) பின்வரும் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் :—

(i) சமூக நலன்புரி ;

(ii) புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு ;

(iii) சூழல் ;

(iv) உண்ணாட்டலுவல்கள் ;

(v) சுகாதாரம் ;

(vi) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் ;

(vii) வீடமைப்பு ;

(viii) கரையோரம் பேணல் ;

(ix) நீர்ப்பாசனம் ;

(x) மின்சக்தி ;

(xi) பாதுகாப்பு ;

(xii) பொலிசு ;

(xiii) நிதி ;

(xiv) காணி ;

(xv) மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள்;

(xvi) வெளி விவகாரம் ;

(xvii) நீர் வழங்கல் ;

(xviii) பெருந்தெருக்கள் ;

(xix) நகர அபிவிருத்தி ;

(xx) கல்வி ;

(ஈ) அரசியலமைப்பின் 154அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணசபை ஒவ்வொன்றினதும் முதலமைச்சர்கள் :

ஆயின், ஏதேனும் மாகாணத்துக்காக மாகாண சபை தேர்ந்தெடுக்கப்படாத விடயத்தில், அத்தகைய மாகாணத்துக்காக நியமிக்கப்பட்ட ஆளுநர்; அத்துடன்

(உ) உட்பிரிவு (3) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்கள் ;

(2) பேரவையின் செயலாளராகவிருப்பதற்கென ஆளொருவரைப் பேரவையானது நியமித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் பேரவையின் உறுப்பினரொருவராக இருத்தலும் வேண்டும்.

(3) சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவருடனான கலந்தாலோசனையுடன் எதிர்த்தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களிடையேயிருந்து ஐந்து ஆட்களை, பேரவையின் உறுப்பினர்களாகப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(4) பேரவையானது, காலத்துக்குக்காலம், அது அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, வேறேதேனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரைப் பேரவையின் உறுப்பினரொருவராகச் சேர்த்துக் கொள்ளலாம்.

(5) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயமொன்றானது, சனாதிபதியால் தனக்கென்று குறித்தளிக்கப்பட்ட ஒரு விடயமாகவுள்ள விடத்து அல்லது பிரதம அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஒரு விடயமாகவுள்ளவிடத்து, விடயத்திற்கேற்ப, சனாதிபதியால் அல்லது பிரதம அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவோர் ஆள், சனாதிபதியை அல்லது பிரதம அமைச்சரைப் பேரவையில் பிரதிநித்துவப்படுத்துதல் வேண்டும்.

பேரவையின் பணிகள்.

**4.** பேரவையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) (i) பேரழிவிலிருந்து சமுதாயத்தையும் சூழலையும் பாதுகாப்பதற்கும் மற்றும் பேரழிவினால் பாதிக்கப்பட்ட இடப்பரப்புக்களைப் பேணுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் ;

(ii) தயார் நிலையில் வைத்திருப்பதற்கும், பாதுகாப்பதற்கும், உதவிபுரிவதற்கும், நிவாரணமளிப்பதற்கும், புனரமைப்பதற்கும் மற்றும் புனர்வாழ்வுக்கும் என வளங்களைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும் ;

(iii) பொதுமக்கள் விழிப்புக் கவனத்தை உயர்த்துவதற்கும் மற்றும் மக்கள் தம்மைப் பேரழிவிலிருந்து பாதுகாப்பதற்கு உதவிசெய்வதற்குப் பயிற்சி அளிப்பதற்கும் ;

(iv) பேரழிவால் பாதிக்கப்படக்கூடிய சாத்தியமுள்ள இடப்பரப்புக்களில் வாழ்கின்ற ஆட்களிடையே ஆபத்தைச் செயலாட்சி செய்வது தொடர்பில் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் மற்றும் பேரழிவுச் செயலாட்சி, தணித்தற் பயிற்சிகளைப் பிரயோகிப்பதற்கும் ; அத்துடன்

(v) பேரழிவுக்குப் பின்னரான நிவாரணம், மீட்பு மற்றும் புனர்வாழ்வுக்கான திறமைகளை நிலைத்திருக்கச் செய்து அவற்றை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் பேரழிவுக்கு முந்திய திட்டமிடுதலுக்கும், தயார் நிலைக்கும், தணித்தலுக்கும்,

ஏற்பாடு செய்கின்ற பேரழிவின் செயலாட்சி மீது தேசியக் கொள்கையொன்றையும் நிகழ்ச்சித் திட்டமொன்றையும் வகுத்தமைத்தல் ;

(ஆ) (i) பேரழிவுகள் மற்றும் வேறு எவையேனும் அவசர கால நிகழ்வுக்களுக்கான தயார் நிலையில் இருத்தல்;

(ii) ஆபத்தைத் தடுத்தல் ; அத்துடன்

(iii) பேரழிவைத் தவிர்த்தல் மற்றும் தணித்தல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கென (அ) என்னும் பந்தியின்கீழ் வகுத்தமைக்கப்பட்ட தேசியக் கொள்கையினதும் நிகழ்ச்சித் திட்டத்தினதும் அடிப்படையில் தேசிய பேரழிவுச் செயலாட்சித் திட்டத்தையும் தேசிய அவசரகாலச் செயற்பாட்டுத் திட்டத்தையும் தயாரித்தலும் வகுத்தமைத்தலும் ;

(இ) தேசிய பேரழிவுச் செயலாட்சித் திட்டத்தினதும் தேசிய அவசரகாலச் செயற்பாட்டுத் திட்டத்தினதும் செயற்பாட்டைக் கண்காணித்தலும் மற்றும் அத்தகைய திட்டங்களை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக அதற்குச் சமர்ப்பித்தலும் ;

(ஈ) ஏதேனும் பேரழிவு ஏற்படும் பட்சத்தில், அவசரகால உதவி, மீட்பு, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு என்பவற்றை ஏற்பாடு செய்தல் ;

(உ) தோதானதென அது கருதுமிடத்து, தேசிய பேரழிவுச் செயலாட்சித் திட்டத்திற்கிணங்க அல்லது அத்தகைய நோக்கங்களுக்கெனப் பேரவையால் முடிவுசெய்யப்படக் கூடியவாறான அத்தகைய வழிமுறைகளுக்கிணங்க ஏதேனும் பேரழிவை அல்லது நிகழப்போகும் பேரழிவைத் தடுப்பதற்கு அவசியமான எல்லா நடபடிகளையும் எடுத்தல் ;

(ஊ) எட்டாம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட பேரழிவுச் செயலாட்சி நிலையம் மற்றும் 21 ஆம் பிரிவின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட தோதான ஒழுங்கமைப்புக்கள் என்பவற்றின் செயற்பாடுளை நெறிப்படுத்துதலும், ஒருங்கிணைத்தலும், கண்காணித்தலும் அத்துடன் கிடைக்கக்கூடியனவாகவிருக்கும் வளங்கள், அத்தகைய நிலையத்தினாலும் ஒழுங்கமைப்புக்களினாலும் அவற்றின் பணிகளை நிறைவேற்றுதலில் பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதலும்;

(எ) தேசிய பேரழிவுச் செயலாட்சித் திட்டத்திற்கும் தேசிய அவசரகாலச் செயற்பாட்டுத் திட்டத்திற்கும் போதியளவு விளம்பரம் கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துதல் ;

(ஏ) 10 ஆம் பிரிவின்கீழ்ப் பேரழிவுச் செயலாட்சித் திட்டங் களைத் தயாரிப்பதில் ஒவ்வோர் அமைச்சினாலும், அரசாங்கத் திணைக்களத்தினாலும், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினாலும், இணங்கியொழுகப்பட வேண்டிய வழிகாட்டு நெறிகளைக் குறித்துரைத்தல் ;

(ஐ) நிகழக்கூடிய அல்லது நிகழ்ந்துள்ள ஏதேனும் பேரழி வின் விடயத்தில், உள்ளூர் மற்றும் சமுதாயத் தன்னம்பிக்கையை ஏற்படுத்துதலும் ஆதரவளித்தலும் ;

(ஒ) பேரழிவுச் செயலாட்சி தொடர்பாகப் பொதுமக்கள் விழிப்புணர்வு இயக்கங்களை மேம்படுத்தலும் அத்துடன் பேரழிவுச் செயலாட்சி பற்றிய ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் நிதியளித்தலும் ;

(ஓ) அனர்த்தம், இடருறு நிலை, ஆபத்துக் குறைப்பு என்பன சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்ளுகின்ற அத்து டன் நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்ற மற்றும் அத்தகைய ஆய்வுகளையும் நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டங்களையும் ஆரம்பிக்கின்ற ஒழுங்கமைப்புக்களுடனும் ஆட்களுடனும் தொடர்பை ஏற்படுத்துவதற்கு வசதியளித்தல் ;

(ஔ) எட்டாம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட பேரழிவுச் செயலாட்சி நிலையத்திற்குப் பணிகளையும் பொறுப்புக் களையும் குறித்தளித்தல் ;

(க) பேரழிவுவைத் தடுத்தலும் தணித்தலும் அத்துடன் நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு என்பன வற்றை ஏற்பாடு செய்தலும் தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடங்குதல் ;

(ங) நிகழக்கூடியவையும் அத்துடன் நிகழ்ந்துள்ளவையுமான பேரழிவுகள் சம்பந்தமாக இயைபான எல்லாக் கருமங் கள் பற்றியும் அமைச்சரவைக்கு அறியத்தருதல் ;

(ச) இயைபான அதிகாரசபைகள் மற்றும் குழுக்கள் அத்துடன் 1993 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, புனரமைப்பு, புனர்வாழ்வு நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புனரமைப்பு, புனர்வாழ்வு நிதியம் என்பவற்றிலிருந்து பேரழிவுச் செயலாட்சிக்கான நிதிகள் குறித்தொதுக்கப் படுவதனை விதந்துரைத்தல்.

பேரவையின் கூட்டங்கள்.

**5.** (1) பேரவையானது அவசியமாகவிருக்கும் எண்ணிக்கையான தடவைகள் கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும், ஆயின் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவைக்குக் குறையாமல் கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும்.

(2) தவிசாளர் சமுகமாயிருந்தால், அவர் பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் பேரவை அத்தகைய ஏதேனும் கூட்டத்துக்கு வருகை தராதிருந்தால், துணைத் தவிசாளர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர், துணைத் தவிசாளர் ஆகிய இருவரும் சமுகமளிக்காதவிடத்து, கூட்டத்திற்குச் சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தம்முள்ளிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

கூட்டங்களிலான கூட்ட நடப்பெண்.

**6.** (1) பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொன்றாதல் வேண்டும்.

(2) பேரவையானது, பேரவையின் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கைமுறை மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் என்பவற்றை ஒழுங்குபடுத்தலாம்.

பேரவையின் இலச்சினை.

**7.** (1) பேரவையின் இலச்சினையானது, பேரவையினால் தீர்மானிக்கப்பட்டு உருவமைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அது பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றவும்படலாம்.

(2) பேரவையின் இலச்சினையானது பேரவையின் செயலாளரினது கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(3) பேரவையின் இலச்சினையானது, பேரவையின் அனுமதியுடனும், பேரவையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலும் அன்றி, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; அத்துடன் அவ்வுறுப்பினர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அந்தச் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

(4) பேரவையானது, எந்தச் சாதனங்களுக்கும் ஆவணங்களுக்கும் பேரவையின் இலச்சினை பொறிக்கப்பட்டதோ அந்தச் சாதனங்களினதும் ஆவணங்களினதும் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

*பேரழிவுச் செயலாட்சி நிலையத்தைத் தாபித்தல்.*

**8.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான பணிப்பாளர் தலைமையதிபதியினாலும் அத்தகைய எண்ணிக்கையினரான வேறு பணிப்பாளர்களினாலும் தலைமை தாங்கப்படுகின்ற பேரழிவுச் செயலாட்சி நிலையம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியும் மற்றும் ஏனைய பணிப்பாளர்களும் அமைச்சரின் கலந்தாலோசனையுடன் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட நிலையத்தின் பணிகள் பேரவையினால் குறித்தளிக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், பின்வருவனற்றை உள்ளடக்குதலும் வேண்டும் :—

(அ) தேசிய பேரழிவுச் செயலாட்சித் திட்டத்தையும் தேசிய அவசரகாலச் செயற்பாட்டுத் திட்டத்தையும் தயாரிப்பதில் பேரவைக்கு உதவுதலும் மற்றும் அவசியமாகின்றபோது அதனைத் தரமுயர்த்துவதற்கு, முன்மொழிதலும் ;

(ஆ) தேசிய பேரழிவுச் செயலாட்சித் திட்டமும் தேசிய அவசர காலத் தொழிற்பாடுகள் திட்டமும் நடைமுறைப் படுத்தப்படுவதற்கான பொறுப்பினை ஏற்றலும், மற்றும் பேரழிவு நிலையொன்று வெளிப்படுத்தப்படுவதன் மீது தேசிய அவசரகாலத் தொழிற்பாடுகள் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனைப் பணித்தலும் ஒருங்கிணைத்தலும் ;

(இ) அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றால் தயாரிக்கப்பட்ட பல்வேறு பேரழிவுச் செயலாட்சித் திட்டங்கள், தேசிய பேரழிவுச் செயலாட்சித் திட்டத்துடன் இசைந்தொழுகுவனவாக இருப்பதை உறுதிப்படுத்தலும் ;

(ஈ) பத்தாம் பிரிவின்கீழ்ப் பல்வேறு அமைச்சுக்களினாலும் அரசாங்கத் திணைக்களங்களினாலும், பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினாலும் தயாரிக்கப்பட்ட பேரழிவுச் செயலாட்சித்திட்டங்களின் அடிப்படையில், பேரழிவுத் தயார் நிலை, குறைப்பு, தடுத்தல், நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புச் செயற்பாடுகள் என்பவற்றுக்கான நிகழ்ச்சித் திட்டங்களையும், திட்டங்களையும் தயாரித்தலும் நடைமுறைப்படுத்துதலும் மற்றும் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களையும், திட்டங்களையும் செயற்படுத்துகின்ற ஒழுங்கமைப்புக்களை ஒருங்கிணைத்தலும், அத்தகைய செயற்பாடுகளுக்காகத் திறைசேரியிடமிருந்து நிதியுதவியைப் பெறுதலும், இயைபான பிராந்தியங்களுக்கு அதனை அளித்தலும் மற்றும் இச்செயற்பாடுகளைக் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும் ;

(உ) பேரழிவுச் செயலாட்சி தொடர்பான செயற்பாடுகள் பற்றித் தோதான ஒழுங்கமைப்புக்களும், அரசாங்கஞ் சாராத ஒழுங்கமைப்புக்களுக்கும், மாவட்டச் செயலாளர்களுக்கும், பிரதேசச் செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல்களையும் வழிகாட்டு நெறிகளையும் வழங்குதலும், அத்தகைய ஒழுங்கமைப்புக்களினதும் செயலாளர்களினதும் ஒருங்கிணைப்புடன் வேலை நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடக்கி வைத்தலும் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துதலும் ;

(ஊ) பேரழிவுச் செயலாட்சி தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துதலும், பேரழிவுச் செயலாட்சி பற்றிய தரவுத் தளமொன்றைத் தாபித்தலும் பேணுதலும் ; அத்துடன்

(ஏ) பேரவையின் செயற்பாடுகள் தொடர்பாகக் காலத்துக் குக் காலமும் அத்துடன் அதனால் தேவைப்படுத்தப் படும் போதெல்லாம் பேரவைக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

தொழினுட்ப மதியுரைக் குழுக்களை நியமித்தல்.

**9.** (1) பேரவையும், பேரழிவுச் செயலாட்சி நிலையமும் இச்சட்டத் தின்கீழ் அவற்றின் பணிகளை நிறைவேற்றுகையில், விடயத்துக் கேற்ப, பேரவையின் அந்தந்தப் பணிகளும் பொறுப்புக்களும் தொடர்பாக நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள உயர் தொழிலார் களையும் நிபுணர்களையும் கொண்டமைக்கப்பட்ட, பேரவையால் அவசியமெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக் கையான தொழிநுட்ப மதியுரைக் குழுக்களினால் உதவப்படுதல் வேண்டும்.

(2) தொழினுட்ப மதியுரைக் குழுக்களினது உறுப்பினர்கள் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட தொழினுட்ப மதியுரைக் குழுக்களின் தவிசாளர்கள் பேரவையினால் நியமிக் கப்படுதல் வேண்டும்.

பேரழிவுச் செயலாட்சித் திட்டம்.

**10.** (1) ஏதேனும் பேரழிவை அல்லது ஏற்படக்கூடியதாகவுள்ள பேரழிவைத் தடுப்பதற்கு, தேசிய பேரழிவுச் செயலாட்சித் திட் டத்தை அடிப்படையாகக் கொண்டும் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வழிகாட்டு நெறிகளுக்கு இணங்கவும், ஒவ் வோர் அமைச்சு, அராசங்கத் திணைக்களம் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் என்பன தொடர்பிலான பேரழிவுச் செயலாட்சித் திட்டமொன்றைத் தயாரித்தல், அத்தகைய அமைச்சு, அரசாங்கத் திணைக்களம் மற்றும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் கடமையாதல் வேண்டும்.

(2) ஓர் பேரழிவுச் செயலாட்சி நிலையம், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஓர் அமைச்சினால், அரசாங்கத் திணைக் களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் வேண் டப்படின், விடயத்துக்கேற்ப, அத்தகைய அமைச்சுக்கு, திணைக் களத்துக்கு அல்லது கூட்டுத்தாபனத்துக்கு அதன் பேரழிவுச் செய லாட்சித் திட்டத்தைத் தயாரிப்பதில் அவசியமான எல்லா உதவி களையும் அளித்தல் வேண்டும்.

(3) ஏதேனும் பேரழிவை அல்லது ஏற்படக்கூடிய பேரழிவைத் தடுப்பதற்கு, விடயத்துக்கேற்ப, ஒவ்வோர் அமைச்சினாலும் அரசாங்கத் திணைக்களத்தினாலும் பகிரங்கக் கூட்டுத்தாபனத் தினாலும் எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பேரழிவுத் தடுப்பு வழிமுறைகள் தொடர்பான விபரமான பேரழிவுச் செய லாட்சித் திட்டமொன்றை, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் பேரவையினால் தீர்மானிக்கப்படவேண்டிய அத்தகைய தேதியன்று அல்லது அதற்கு முன்னதாக அத்தகைய அமைச்சு, அரசாங்கத் திணைக்களம் அத்துடன் பகிரங்கக் கூட்டுத்தாபனம் நிலையத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) நிலையமானது, (3) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய நிலையத்தினாற் பெறப்பட்ட ஒவ்வொரு பேரழிவுச் செயலாட்சித் திட்டத்தையும் பேரவைக்கு அதன் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித் தல் வேண்டும்.

*பேரழிவு நிலை பற்றிய வெளிப் படுத்துகை.*

**11.** (1) ஏதேனும் நேரத்தில், பேரழிவொன்றின் அல்லது ஏற்பக்கூடிய பேரழிவொன்றின் அளவானது அல்லது கொடூர மானது, அத்தகைய பேரழிவை அல்லது ஏற்படக்கூடிய பேரழி வைத் தடுப்பதற்கு அவசியமான எவையேனும் வழிமுறைகளை எடுப்பதற்கு நிருவாகத்திற்குச் சாதாரணமாகக் கிடைக்ககூடியன வாகவுள்ள வளங்களுக்கு அல்லது வழிவகைகளுக்கு அப்பாற் பட்டதாக இருக்குமளவுக்கு அத்துணைப் பாரியதாக இருப்பின் அல்லது இருக்கக்கூடிய சாத்தியம் இருப்பின் சனாதிபதியானவர், அவரது சொந்தப் பிரேரணையின்மீதோ அல்லது பேரவையின் மதியுரையின்மீதோ, ஒன்றில் அத்தகைய பிரகடனத்தில் குறித் துரைக்கப்படும் ஏதேனும் இடப்பரப்பு அல்லது இடப்பரப்புக்கள் தொடர்பில் அல்லது நாடு முழுவதும் தொடர்பில் பேரழிவு நிலையொன்று ஏற்பட்டிருக்கின்றது எனப் பிரகடனத்தின் மூலம் வெளிப்படுத்தலாம்.

(2) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, (1) ஆம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட பிரகடனமொன்று அத்தகைய பிரகடனம் எத்தேதியன்று செய்யப்பட்டதோ அத்தேதியன்று வலு வுக்கு வருதல் வேண்டுமென்பதுடன், பிரகடனத்தின் தேதியி லிருந்து இரண்டு மாதக் காலப்பகுதியொன்றுக்குத் தொடர்ந்து

வலுவிலிருத்தலும் வேண்டும், அத்துடன் அதன்பின்னர் அவசிய மாயின், ஒரு தடவையில் இரண்டு மாதங்களை விஞ்சாத மேலதிகக் காலப் பகுதிகளுக்கு அது நீடிக்கவும் படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட பிரகடனமொன்று, அப்பிரகடனமானது வெளிப்படுத்தப்பட்ட தேதியை உடனடுத்து வருகின்ற அதன் முதலாவது அமர்வின்போது பாராளுமன்றத் தின் தீர்மானமொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படுவதற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(4) பாராளுமன்றமானது அதன் முன்னர் கொண்டுவரப்பட்ட பிரகடனமெதனையும் அங்கீகரிக்காமல் விடுமிடத்து, அத்தகைய பிரகடனமானது அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்டதன்மேல் உடனும், அதன் கீழ்ச் சட்டப்படி செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, வலுவிழந்ததாதல் வேண்டுமென்பதுடன், சட்டத்தில் வலு எதுவும் அற்றதாதலும் வேண்டும்.

பேரழிவு நிலையொன்று வெளிப்படுத் தப்படும் பட்சத்தில் கடைப் பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

**12.** (1) சனாதிபதியினால் பேரழிவு, நிலையொன்று வெளிப் படுத்தப்படுவதன்மீது சனாதிபதி 21 ஆம் பிரிவின்கீழ்ப் பெயர் குறிப்பிடப்பட்ட தோதான ஒழுங்கமைப்புக்களில் ஏதேனும் ஒன்றையோ அல்லது பலவற்றையோ பின்வருவனவற்றைச் செய்வ தற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பணித்தல் வேண் டும் :—

(அ) பதினோராம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ், எந்த இடப்பரப்பு அல்லது இடப்பரப்புக்கள் தொடர்பில் பிரகடனமொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பிற்குள் அல்லது இடப்பரப்புக்களுக்குள் பேரழிவின் அல்லது சாத்தியப்படக்கூடிய பேரழிவின் தாக்கத்தைத் தடுப்பதற்கென அல்லது அத்தகைய பேரழிவின் அல்லது சாத்தியப்படக்கூடிய பேரழிவின் தாக்கத்தைத் தணிப்பதற்கு அவசியமாகக் கூடிய வாறான கிடைக்கக்கூடியதாவுள்ள வளங்கள் எல்லா வற்றையும் நெறிப்படுத்துவதற்கும், இயைபுபடுத்து வதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும் ;

(ஆ) மேலதிக வளங்கள் கிடைத்திருக்குமாயின், அத்துடன் கிடைத்திருக்கும்போதும், அவற்றின் ஒதுக்கீடுகள் தொடர்பாக, செய்யப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளுக்கிணங்க, மேலதிக வளங்களை நெறிப்படுத்துவதற்கும், இயைபுபடுத்துவதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும் ; அத்துடன்

(இ) விடயத்துக்கேற்ப, தேசிய பேரழிவுச் செயலாட்சித் திட்டத்தில் அல்லது தேசிய அவசரகாலச் செயற்பாட்டுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அத்தகைய நடவடிக்கைகளை, சனாதிபதியால் அத்தகைய தோதான ஒழுங்கமைப்பிற்கு வழங்கப்படக்கூடிய வாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க எடுப்பதற்கும்,

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் 11 ஆம் பிரிவின்கீழ்ப் பேரழிவு நிலையொன்று சனாதிபதியினால் வெளிப்படுத்தப்படுவதன்மேல், பிரிவு 10 இன் கீழ் அவர்களால் தயாரிக்கப்பட்ட பேரழிவுச் செயற்பாட்டுத் திட்டத்தை, விடயத்திற்கேற்ப அவர்களது முறையான அமைச்சுக்குள்ளோ, திணைக்களத்திற்குள்ளோ அல்லது கூட்டுத்தாபனத்திற்குள்ளோ உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பது, ஒவ்வொரு அமைச்சினதும், திணைக்களத்தினதும் அல்லது கூட்டுத்தாபனத்தினதும் கடமையாதல் வேண்டும்.

பேரவையானது அரசாங்கச் சார்பற்ற ஒழுங்கமைப்புக்களின் உதவியைப் பெறுதல்.

**13.** (1) பன்னிரண்டாம் பிரிவிலுள்ள ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், பிரிவு 11 இன் கீழ்ப்பேரழிவு நிலையொன்று வெளிப்படுத்தப்பட்டிருக்குமிடத்து, பேரவையானது, அது அவசியமானதெனவோ அல்லது தோதானதெனவோ கருதுகின்றவிடத்து, 12ஆம் பிரிவின்கீழ் அதன் கடமைகளை நிறைவேற்றுதலில் ஏதேனும் தோதான ஒழுங்கமைப்புக்கு உதவுவதற்கென எந்த அரசாங்கச் சார்பற்ற ஒழுங்கமைப்பின் செயற்பாடுகள் தேசிய சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் பங்கம் விளைவிக்காததாகவுள்ளதோ அந்த ஏதேனும் அரசாங்கச் சார்பற்ற ஒழுங்கமைப்பினது உதவியினைப் பெறலாம்.

(2) அரசாங்கச் சார்பற்ற ஒழுங்கமைப்பொன்றிடமிருந்து (1) ஆம் உட்பிரிவின்கீழ் உதவி பெறப்படுகின்றவிடத்து, அத்தகைய ஒழுங்கமைப்பு தோதான எந்த ஒழுங்கமைப்பிற்கு உதவிசெய்

கின்றதோ அந்த தோதான ஒழுங்கமைப்பினால் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களுக்கிணங்கச் செயற்படுதல் வேண்டுமென்பதுடன், வழங்கப்பட்ட சேவைகளுக்காக அதற்குப் பேரவையினால், பேரவையின் நிதியத்திலிருந்து பேரவையால் தீர்மானிக்கப்பட வேண்டியதான அத்தகைய தொகை செலுத்தப்படுதலும் வேண்டும்.

தோதான ஒழுங்கமைப் பொன்றின் கடமைகள்.

**14.** (1) பின்வருமாறு செய்வது 12 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்குப் பணிக்கப்பட்ட தோதான ஒழுங்கமைப்பொன்றின் கடமையாதல் வேண்டும் :-

(அ) மனித உயிரைக் காப்பாற்றுகின்ற அல்லது மனித உயிருக்கு ஊறு ஏற்படுவதைத் தடுக்கின்ற அல்லது எவ்வாட்களின் உயிர்களுக்கு அபாயம் ஏற்பட்டிருக்கின்றதோ அவ்வாட்களை மீட்கின்ற நோக்கத்துக்காக அல்லது பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு இன்னலிலிருந்து அல்லது துன்பத்திலிருந்து நிவாரணம் வழங்குவது தொடர்பிலான வேறேதேனும் அவசரமான நடவடிக்கைகள் எடுப்பதனை வசதிப்படுத்தும் நோக்கத்துக்காக உட்புகுவது அவசியமானதென, நியாயமான ஏதுக்களின்மீது, அத்தகைய தோதான ஒழுங்கமைப்பானது நம்புகின்றதான ஏதேனும் இடத்தினுள் புகுதல் ;

(ஆ) பாதிக்கப்பட்ட அல்லது தாக்கப்படத்தக்க இடப்பரப்புக்களில் இருந்து மக்களை, ஆதனத்தை அல்லது விலங்குகளை வெளியேற்றுதல் ;

(இ) பொலிசார் அத்துடன் ஆயுதப் படையினர் வந்துசேரும் வரையில் பேரழிவுத் தடுப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கென ஏதேனும் வீதியிலான அல்லது தெருவிலான (அது பகிரங்க வீதியாக இருப்பினுஞ்சரி அல்லது தனியார் வீதியாக இருப்பினுஞ்சரி) போக்குவரத்தை, போக்குவரத்துச்செய்யும் உரிமையை அல்லது ஏதேனும் பகிரங்க இடத்தின் மீதான போக்குவரத்தை மூடுதல் ;

(ஈ) பேரழிவுத் தடுப்பு நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்துவதற்குத் தடையாக இருக்கும் ஏதேனும் முட்டுக்கட்டை பொலிசாரின் அல்லது ஆயுதப்படை யினரின் உதவியுடன் அகற்றுதல் ; அத்துடன்

(உ) எவையேனும் பேரழிவுத் தடுப்பு நடவடிக்கைகளைப் பயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்தும் நோக்கத் திற்கு நியாயமானவளவு அவசியமானதென விடயத்திற் கேற்ப, அத்தகைய தோதான ஒழுங்கமைப்பு அல்லது ஒழுங்கமைப்புக்கள் கருதக்கூடியவாறான வேறு ஏதே னும் செயலைச் செய்வதற்கு அல்லது 12 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய தோதான ஒழுங்கமைப்பால் எடுக்கப் படுவதற்குப் பணிக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கைக்குப் பூர்வாங்கமான அல்லது இடைநேர்விளைவான ஏதே னும் செயலைப் புரிதல்.

(2) பேரவை 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதன் கடமைகளைப் புரிகையில் அதனால், ஏதேனும் தோதான ஒழுங்கமைப்புக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் எந்த இடப்பரப்பு அல்லது இடப்பரப்புக்கள் தொடர் பில் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்த இடப் பரப்புக்குள் அல்லது இடப்பரப்புக்களுக்குள் மட்டுமே, அத்தகைய ஒழுங்கமைப்பினால் புரியப்படுதல் வேண்டும்.

**15.** (1) பன்னிரெண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தோதான ஒழுங்கமைப்பானது ஏதேனும் நடவடிக்கையை எடுக்கும்போது அல்லது 14 ஆம் பிரிவின்கீழ் அதன் கடமைகளைப் புரியும்போது அதனால் செய்யப்பட்ட ஏதேனும் செயலின், செய்யாமையின் அல்லது தவறுகையின் காரணமாக அல்லது 13 ஆம் பிரிவின்கீழ்த் தோதான ஒழுங்கமைப்பொன்றுக்கு உதவி செய்கின்ற அரசாங்கச் சார்பற்ற ஒழுங்கமைப்பொன்றினால், அல்லது ஒரு பொலிசு அலுவலரி னால் அல்லது ஆயுதப்படையின் உறுப்பினர் ஒருவரினால் அவரின் ஆதனத்திற்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதத்தினால் இன்னலுறுகின்ற ஆள் எவரும், அத்தகைய இழப்பு அல்லது சேதம் தொடர்பில், அத்தகைய ஆதனம் அமைந்துள்ளதான பிரதேசத்தின் பிரதேசச் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு தொகையினதான நட்டஈட்டுக்கு உரித்துடையவராதல் வேண்டும். நட்டஈட்டு அளிப்பு.

(2) பிரதேசச் செயலாளரானவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ்ச் செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, அரசாங்க மதிப்பீட்டாளர் ஒருவரது உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

(3) ஆதனத்திற்கு ஏற்படுத்தப்பட்ட இழப்பிற்கான அல்லது சேதத்திற்கான நட்டஈட்டுத் தொகையானது, பிணக்கு ஏற்படும் பட்சத்தில், அத்தகைய ஆதனமானது எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாவட்ட நீதிமன்றத்தினால், எந்த ஆளினால் அத்தகைய இழப்பு அல்லது சேதம் உறப்பட்டதோ அந்த ஆளினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது சுருக்கமுறையான நடவடிக்கைமூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

பேரவையின் மூலதனம்.

**16.** பேரவையின் ஆரம்ப மூலதனமானது ஒரு கோடி ரூபாவாக இருத்தல் வேண்டும். ஆரம்ப மூலதனத் தொகையானது திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணத்தொகைகள் 17 ஆம் பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

பேரவையின் நிதியம்.

**17.** (1) பேரவையானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். பேரவையின் நிதியத்திற்குப் பின்வருவன வரவு வைக்கப்படுதல் வேண்டும் -

(அ) பேரவையின் ஆரம்ப மூலதனமாக திரட்டுநிதியத்திலிருந்து பெறப்பட்ட பணம் ;

(ஆ) பேரவையினால் அதன் பணிகளைப் புரிகையில் பெறக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள் ; அத்துடன்

(இ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி, எத்தன்மைத்தானதுமான ஏதேனும் சட்டமுறையான மூலத்திலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக் கொடைகள் என்றவகையில் பேரவையினால் பெறக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்.

(2) பேரவையினால் இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளைப் புரிகையில் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகள் மற்றும் கணக்காய்வு.

**18.** (1) பேரவையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும்

(2) பேரவையானது, பேரவையின் வரவு, செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லா கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், பேரவையின் கணக்குகளின் கணக்காய்விற்கும் மற்றும் அது தொடர்பிலும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்புடைமை.

**19.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இல் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், பேரவையின் கணக்குகளுக்கும் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பேரவையின் பணியாட்டொகுதி.

**20.** (1) பேரவையானது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அத்துடன் இச்சட்டத்தை நிருவகிப்பதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் அவசியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களையும், சேவையாளர்களையும் மற்றும் முகவர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களும் சேவையாளர்களும் முகவர்களும் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் அளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர்கள் பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

(3) பேரவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் மற்றும் பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினதும் சம்மதத்துடன், அதையொத்த சம்மதத்துடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதையொத்ததொரு சம்மதத்துடன், அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும், அவர் தொடர்பிலும், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும், அவர் தொடர்பிலும், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) எந்த ஒப்பந்தத்தின்மூலம் எவரேனும் ஆள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ளாரோ அந்த ஒப்பந்தத்தை அரசாங்கத்துடன் செய்துகொண்டுள்ளவரான ஆளெவரையும் பேரவையானது ஊழியத்துக்கமர்த்தியுள்ளவிடத்து, அவ்வாளினால் பேரவைக்குச் செய்யப்பட்ட ஏதேனும் சேவைக் காலப்பகுதியானது, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, அரசாங்கத்திற்குச் செய்யப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

தோதான ஒழுங்கமைப்புக்களைப் பெயர் குறிப்பிடுதல்.

**21.** (1) பேரவையானது, அது தோதானதெனக் கருதுகின்றபோதிலெல்லாம், விடயத்துக்கேற்றாற்போல, தேசிய பேரழிவுச் செயலாட்சித் திட்டத்தை அல்லது தேசிய அவசரகாலத் தொழிற்பாடுகள் திட்டத்தைக் கொண்டுநடாத்துவதற்கும் நடைமுறைப்

படுத்துவதற்கும் அத்துடன் அதன் பணிகளை நிறைவேற்றுவதில் பேரவைக்குப் பொதுவாக உதவுவதற்கும் தேவைப்படும் ஏதேனும் அமைச்சை, அரசாங்கத் திணைக்களத்தை பகிரங்கக் கூட்டுத் தாபனத்தை அல்லது பேரழிவுச் செயலாட்சி நிலையத்தைத் தோதான ஒழுங்கமைப்பொன்றாக (இச்சட்டத்தில் "ஒரு தோதான ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பிடப்படும்) பெயர் குறிப்பிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் தோதான ஒழுங்கமைப்பொன்று 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ்ச் செய்யுமாறு அதனிடம் கோரப்படக்கூடிய வாறான எவையேனும் கடமைகளை நிறைவேற்றுமாறும் அத்துடன் இச்சட்டத்தின்கீழ்ப் பேரவை அதன் பணிகளைப் புரிகையில் பொதுவில் அதற்குத் துணைபுரியுமாறும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) பேரவையானது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்டுள்ள அந்தந்தத் திட்டங்களைக் கொண்டுநடாத்தும் மற்றும் நடைமுறைப்படுத்தும்வகையில் ஒரு தோதான ஒழுங்கமைப் பானது நிறைவேற்றவேண்டிய பணிகளைத் தீர்மானித்தலும் மற்றும் குறித்துரைத்தலும் வேண்டும் என்பதுடன், அவசியமான விடத்து, அதற்கான வழிகாட்டுநெறிகளை வழங்குதலும் வேண்டும்.

(4) தோதான ஒழுங்கமைப்பொன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ்ப் பேரவையினால் பெயர்குறிப்பிடப்பட்டுள்ளவிடத்து, பேரவையானது, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய தோதான ஒழுங்கமைப்புக்கள் ஒவ்வொன்றும் அதன் நடைமுறைப் படுத்தற் செயற்பாடுகளை எந்த இடப்பரப்பினுள் அல்லது இடப்பரப்புக்களுக்குள் கொண்டுநடாத்த வேண்டுமோ, அந்த இடப்பரப்பை அல்லது இடப்பரப்புக்களைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(5) தோதான ஒழுங்கமைப்பொன்றானது இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களை, அதன் சார்பாக அத்தகைய ஒழுங்க மைப்பினால் எழுத்துமூலம் சிறப்பாகக் குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய அலுவலர்கள் மூலமாக மாத்திரமே புரியலாம்.

*தவிசாளரினால் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் கையளிக்கப்படுதல்.*

**22.** (1) தவிசாளர், எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, இச்சட்டத்தின் கீழான அவரது தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும், பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்குக் கையளிக்க லாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான அத்தகைய ஏதேனும் கையளிப்பு எப்படியிருப்பினும், தவிசாளரானவர், அவ்வாறு கையளிக்கப் பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அல்லது புரியலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணியானது கையளிக்கப்பட்டுள்ளவரான உறுப்பினர் அல்லது அலுவலர் ஒருவர் அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கையில், புரிகையில் அல்லது நிறை வேற்றுகையில், தவிசாளர் காலத்துக்குக்காலம், விடயத்திற்கேற்ப அத்தகைய உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு எழுத்தில் தெரியப்படுத்தக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களுடன் அல்லது நிபந்தனைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ்ப் பேரவையின் எந்த உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த உறுப்பினர் அல்லது அலுவலர் ஒருவர், அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவத்தின், கடமையின் அல்லது பணியின் இடைநேர்விளைவான எல்லாச் செயல்களை யும் காரியங்களையும் செய்வதற்குத் தத்துவமுடையவராதல் வேண் டும்.

*நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயலுக்கான பாதுகாப்பு.*

**23.** பேரவையின் உறுப்பினர் ஒருவருக்கெதிராக அல்லது 12ஆம் பிரிவின்கீழ்ச் சனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட தோதான ஒழுங்கமைப்பொன்றுக்கு எதிராக அல்லது ஒரு பொலிசு அலுவலருக்கெதிராக அல்லது ஆயுதப்படைகளின் உறுப்பினர் ஒருவருக்கெதிராக, இச்சட்டத்தின்கீழ், விடயத்திற் கேற்ப அத்தகைய உறுப்பினர்மீது, தோதான ஒழுங்கமைப்பின் மீது, பொலிசு அலுவலர்மீது அல்லது ஆயுதப்படையின் உறுப்பினர் ஒருவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் கடமையைப் புரிகையில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக் காக, வழக்குத்தொடுப்பு எதுவும் இருத்தலாகாது.

*தவறுகளும் தண்டங்களும்.*

**24.** இச்சட்டத்தினால் எவரேனும் ஆளுக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கையில் அல்லது ஏதேனும் கடமையை நிறைவேற்றுகையில் அத்தகைய ஆளைத் தாக்குகின்ற, தடைசெய்கின்ற, பயமுறுத்துகின்ற, அச்சுறுத்துகின்ற, இழிவுபடுத்துகின்ற அல்லது நிந்தனைசெய்கின்ற ஒவ்வோராளும், இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டு வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது இருபத்தையாயிரம் ரூபாவிற்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*பொருட்கோடல்.*

**25.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"பேரழிவு" என்பது, இலங்கையில் உள்ள எவரேனும் ஆளின் அல்லது ஆட்கள் தொகுதியின் பாதுகாப்புக்கு அல்லது ஆரோக்கியத்துக்கு ஆபத்தாயிருக்கின்ற அல்லது ஆபத்தாயிருப்பதற்கு அச்சுறுத்துகின்ற அல்லது ஏதேனும் ஆதனத்தை அழிக்கின்ற அல்லது சேதப்படுத்துகின்ற, அல்லது அழிப்பதாக அல்லது சேதப்படுத்துவதாக அச்சுறுத்துகின்ற, நிகழ்ந்துள்ள அல்லது நிகழக்கூடிய சாத்தியமுள்ள இயற்கையான அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சம்பவத்தின் தோற்றுகை எனப் பொருள்படும் என்பதுடன், அது பின்வருவனவற்றை உள்ளடக்கும் :—

(அ) நிலச்சரிவு ;

(ஆ) புயல் ;

(இ) வெள்ளம் ;

(ஈ) வரட்சி ;

(உ) கைத்தொழில் ஆபத்து ;

(ஊ) சுனாமி (நிலநடுக்கப் பேரலை) ;

(எ) பூமியதிர்ச்சி ;

(ஏ) ஆகாய ஆபத்து ;

(ஐ) கடல்சார்ந்த ஆபத்து ;

(ஒ) தீ ;

(ஓ) தொற்றுநோய் பரவுகை ;

(ஔ) வெடித்தல் ;

(க) விமானத்தாக்குதல் ;

(ஙு) குடியியல் அல்லது உள்நாட்டுக் கலகம் ;

(ச) இரசாயனமுறை விபத்துக்கள் ;

(ஞு) கதிரியக்கமுறை அவசர நிலைமைகள் ;

(ட) உள்நாட்டு மற்றும் கடல்சார் எண்ணெய் சிந்துதல்கள் உள்ளடங்கலான எண்ணெய் சிந்துதல்கள் ;

(ண) அணுசார் பேரழிவுகள் ;

(த) நகர மற்றும் காட்டுத் தீ ;

(ந) கரையோர மண்ணரிப்பு ; அத்துடன்

(ப) சுழல்காற்று, மின்னல் தாக்குதல் மற்றும் பலத்த இடியுடன்கூடிய கடுங்காற்று ;

"பேரழிவுத் தடுப்பு நடவடிக்கைகள்" என்பது, பொதுமக்கள்மீது அல்லது தனியாள் ஒருவருக்கு அல்லது அரசுக்குச் சொந்தமான ஆதனத்தின்மீது, சாத்தியப்படக்கூடிய ஒரு பேரழிவின் விளைவுகளை தவிர்ப்பதற்கு, குறைப்பதற்கு, தடுப்பதற்கு அல்லது அத்தகைய பேரழிவின் விளைவுகளைத் தணிப்பதற்கு அவசியமான அல்லது விரும்பத்தக்கதான நடவடிக்கைகள் எனப் பொருள்படும் என்பதுடன், அது அத்தகைய நோக்கங்களுக்காகப் பயிற்சி நடத்துவதையும் அல்லது பயிற்சியில் பங்குபற்றுவதையும் உள்ளடக்கும் ;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, மானியம் அல்லது கடன் மூலம் அல்லது வேறுவகையில் திரட்டுநிதியத்திலிருந்து அரசாங்கத்தினால், முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ வழங்கப்பட்ட நிதியுடன் அல்லது மூலதனத்துடன், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது

சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்டுள்ள அல்லது தாபிக்கப் படும் ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருள்படும் ;

"வளங்கள்" என்பது, சமூகத்தின் வாழ்க்கைக்கு அவசியமான தெனக் கருதப்படும் மனித வலுவை அல்லது விலங்கு களை, வாகனங்களை, படகுகளை பொறித்தொகுதி களை, உபகரணத்தை, கருவிகளை, மண் அகற்றும் உபகரணத்தை, அல்லது எவ்விதமான வேறு உப கரணத்தை, நிதியை, களஞ்சியப்படுத்தும் வசதிகளை, அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தை உள்ளடக் கும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**26**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்